**ஜூலை – 10**

# TNPSC துளிகள்

- துருக்கி நான்கு வழித்துணைக் கப்பல்களை பாகிஸ்தானுக்கு விற்பனை செய்ய உள்ளது. இது துருக்கியின் மிகப்பெரிய ஒற்றை ஏற்றுமதி ஒப்பந்தமாகும். கடந்த ஆண்டு மில்ஜெம் (MiLGEM) திட்டத்தின் கீழ் நான்கு வழித்துணைக் கப்பல்களைத் தயாரிக்க பாகிஸ்தானுடன் துருக்கி ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
  - இரண்டு வழித்துணைக் கப்பல்கள் இஸ்தான்புல்லில் தயாரிக்கப்படும். மீதமுள்ள இரண்டு வழித்துணைக் கப்பல்கள் பாகிஸ்தானின் கராச்சியில் தயாரிக்கப்படும்.
- மாநிலத்தில் ஏற்படும் பயணச் செலவுகளைக் குறைக்க அமைச்சர்கள் மற்றும் ஆட்சியாளர்களுக்கு 'ஒரு நபர் ஒரு ஊர்தி' என்ற புதுத் திட்டத்தை மேற்குவங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார்.
  - மேலும் உள்நாட்டில் நடுத்தர வகுப்பில் பயணம் செய்யும் அனைத்து உள்நாட்டு பயணங்கள் மற்றும் வெளிநாட்டுப் பயணங்கள் ஆகியவை முதல்வரின் ஒப்புதலைப் பெற வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- ஜப்பானின் டோக்கியோவில் உள்ள மோரி டிஜிட்டல் கலை அருங்காட்சியக கட்டிடத்தில் உலகின் முதல் டிஜிட்டல் கலை அருங்காட்சியகம் துவங்கப்பட்டுள்ளது.
- அரியானா முதல்வர் மனோகர் பால் கட்டார் "சாயி பீ சர்ச்சா" அல்லது தேநீர் மீதான விவாதம் என்ற பரப்புரையை துவக்கி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் மற்றும் கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.
- இந்தியாவின் முதன்மையான மென்பொருள் சமூகமான தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களில் சங்கம் (NASSCOM), பெங்களூருவில் செயற்கை நுண்ணறிவிற்காகவும் தகவல் அறிவியலுக்காகவும் சிறப்பு மையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.
- மத்திய கலாச்சாரத் துறை இணையமைச்சர் டாக்டர்.மகேஷ் சர்மா, புதுதில்லியில் உள்ள IGNCA மையத்தில் "Arth - Art for Earth" என்ற தலைப்பிலான கண்காட்சியை துவக்கி வைத்துள்ளார்.
  - 'ARTH - Art for Earth' (பூமிக்கான கலை) என்பது மானவ் குப்தாவின் "களிமண்ணின் புகழை கொணரும் அகழ்வுகள்" என்ற தலைப்பில் பொருள்படும். சுற்றுப்புறச்சூழல் பற்றிய கலைப் படைப்புகளின் தொகுப்பு மானவ் குப்தாவால் கலை நயம் மற்றும் இலக்கியத்தின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது.
- ரயில்வே ஆணைப் பத்திரத்திற்குப் பதிலாக IRCTCயுடன் ஒரு ஒப்பந்தம் மேற்கொண்டு மின்னணு பயணச்சீட்டு (e-Ticketing) முறைக்கு மாறிய முதல் மத்திய துணைப் பாதுகாப்புப் படையாக தேசிய பாதுகாப்புப் படை (National Security Guard - NSG) உருவெடுத்துள்ளது. இந்த முறை NSG வீரர்கள் ரயில்வே ஆணைப் பத்திரத்தை கையில் வைத்துக் கொள்வதை தவிர்த்திட உதவும்.
  - IRCTC மத்திய ரிசர்வ் காவல் படைக்காக (Central Reserve Police Force - CRPF) ஆணைப் பத்திரத்துடன் கூடிய மின்னணு பயணச்சீட்டு முறையையும் மேம்படுத்திக் கொண்டிருக்கின்றது.

- 2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் பாட்னா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக ஓய்வு பெற்ற நீதியரசர் L.நரசிம்ம ரெட்டி மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் (Central Administrative Tribunal - CAT) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
    - நீதியரசர் ரெட்டி, நீதியரசர் தினேஷ் குப்தாவிடம் இருந்து பதவியை பெற்றுக் கொள்வார். மேலும் இவர் இப்பதவியை மூன்றாண்டு காலத்திற்கு வகிப்பார்.

# தேசியச் செய்திகள்

## சட்டபூர்வ நபர்களாக விலங்குகள்

- முதன் முதலில் உத்தரகாண்ட் உயர்நீதிமன்றம், அம்மாநிலத்தில் உள்ள விலங்குகளுக்கு சட்டப்பூர்வ நபர்கள் அல்லது நிறுவனம் என்ற அந்தஸ்தை வழங்கியுள்ளது.
- உரிமைகள், கடமைகள் மற்றும் வாழும் மனிதனின் பொறுப்புகள் ஆகியவற்றுடன் கூடிய தனித்துவமான ஆளுமையை விலங்குகள் பெற்றிருக்கும் என்று உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.
- நீதியரசர் ராஜுவ் சர்மா மற்றும் லோக்பால் சிங் ஆகியோர் தலைமையிலான அமர்வு விலங்குகள் இராஜ்ஜியத்தின் மீது தனித்துவமான அந்தஸ்தை வழங்கியுள்ளது.
- பறவைகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் உள்பட அனைத்து விலங்கு இராஜ்ஜியங்களும் உரிமைகள், கடமைகள் மற்றும் வாழும் மனிதனின் பொறுப்புகள் ஆகியவற்றுடன் கூடிய தனித்துவமான ஆளுமை கொண்ட சட்டப்பூர்வ நிறுவனமென உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## குளோபல் வங்கிகளின் 'அதிக ஆபத்து விளைவிக்கக்கூடிய எல்லையின் பட்டியல்'

- சமீபத்தில் முக்கியப் பாதுகாப்பாளர் வங்கிகள் 'அதிக ஆபத்தை உடைய எல்லைகளைக்' கொண்ட 25 நாடுகளின் பட்டியலை இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்துடன் (SEBI - Securties and Exchange Board of India) பகிர்ந்துள்ளது.
- வெளிநாட்டு நிதிகளின் பாதுகாவலராக இருக்கும் குளோபல் வங்கிகள் சீனா, ஐக்கிய அரபு அமீரகம், சைப்ரஸ் மற்றும் மொரீசியஸ் உள்பட 21 நாடுகளை 'அதிக ஆபத்தை உடைய எல்லைகளாக' பெயரிட்டுள்ளது.
- பெரிய முதலீட்டாளர்கள் மற்றும் இந்த நிதியின் மூலம் பயனடையும் முதலாளிகள் ஆகியோர் 'அதிக ஆபத்தை உடைய எல்லைகள்' வழியாக இந்தியாவிற்குள் நுழையும்போது அதிகளவில் சோதனையிடப்படுவார்கள்.
- இந்திய செலவாணியின் மேல் வர்த்தகம் செய்வதற்கு இந்த நாடுகளில் அமைக்கப்பட்டுள்ள நிதியத்தில் பங்கு பெறும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் அதிக சவால்களை எதிர்கொள்வார்கள்.
- 56 நாடுகளின் மூலமாக செபியிடம் பதிவு செய்யப்பட்ட அந்நிய தொகுப்பு முதலீடுகள் இந்தியாவில் முதலீடு செய்கின்றன. இவற்றில் 25 நாடுகள் அதிக

ஆபத்தானவை என கணக்கிடப்பட்டுள்ளன.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## இஸ்ரோவின் முதல் 'பேட் அபோர்ட்' பரிசோதனை

- ஸ்ரீஹரிகோட்டாவின் சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் எதிர்காலத்தில் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்திற்கான 'பேட் அபோர்ட்' (PAT-Pat Abort Test) எனும் கடுமையான பரிசோதனை முதன் முறையாக வெற்றி பெற்றுள்ளது என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.
- எதிர்காலத்தில் விண்ணுக்கு மனிதரை அனுப்பும் போது குழுவினர் தப்பித்தல் அமைப்பு தொழில்நுட்பத்தில் (Crew Escape System Technology) தகுதி பெறுவதற்கு சோதனை வரிசையில் 'பேட் அபோர்ட் பரிசோதனை' என்பது முதலாவது சோதனையாகும்.

### *குழுவினர் தப்பித்தல் அமைப்பு*

- விண்கலம் சிதைவுறும் போது விண்கலத்திலிருந்து விண்கல வீரர் அறையுடன் குழுவினர் அறை விண்கலத்திலிருந்து பாதுகாப்பான தொலைவிற்கு அவசரமாக இழுப்பதற்காக உருவாக்கப்பட்டது இந்த அவசர கால தப்பித்தல் ஆகும்.



### GST 'Verify' செயலி

- மத்திய மறைமுக மற்றும் சுங்க வரிகள் மன்றம் (Central Board of Indirect Taxes and Customs - CBIC) நுகர்வோர் நலன்களை பாதுகாத்திட 'GST Verify' என்ற செயலியை உருவாக்கி வெளியிட்டு இருக்கின்றது.
- இந்த செயலியானது நுகர்வோரிடமிருந்து GST வரியை வசூலிக்கும் ஒரு நபர் அவ்வரியை வசூலிப்பதற்கு தகுதியானவரா இல்லையா என்று சரிபார்க்கும்.
- மேலும் இச்செயலி GST வரியை வசூலிக்கும் தனிநபர்/நிறுவனத்தை பற்றிய தகவல்களையும் அளிக்கும்.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### முதல் BS-VI இயந்திரத்திற்கான சான்றிதழ்

- தானியங்கி தொழில்நுட்பத்திற்கான சர்வதேச மையம் (ICAT - International Centre for Automotive Technology) வால்வோ எய்ச்சர் வர்த்தக வாகன நிறுவனத்திற்காக உயர்சக்தியுடைய இயந்திர மாதிரிக்கான முதல் பாரத் ஸ்டேஜ் - 6 (Bharat Stage - VI) சான்றிதழை நிறைவு செய்துள்ளது.
- இந்த இயந்திரம் இந்தியாவில் வால்வோ எய்ச்சர் நிறுவனத்தால் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட இயந்திரமாகும்.
- இத்தயாரிப்பானது, 2020ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் அமல்படுத்தப்பட இருக்கும் பாரத் ஸ்டேஜ் - 6 விதிகளுக்காக மிகவும் முன்கூட்டியே தயாரிக்கப்பட்டதாகும்.
- தேசிய தானியங்கி சோதனை மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு உள்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் (NATRIP - National Automotive Testing and R & D Infrastructure Project) உலகத் தரத்தில் அமைக்கப்பட்ட முதல் மையம் ICAT ஆகும்.

**EFFORTS TO CONTROL EMISSIONS**

India embarked on a formal emission control regime in 1991. Here is a brief history of the country's efforts to cut vehicle emission.

**1991-92:** The first stage of mass emission norms came into force for petrol vehicles in 1991 and in 1992 for diesel vehicles.

**1995:** From April 1995, the government made fitment of catalytic converters compulsory in new petrol-fuelled passenger cars sold in the four metros of Delhi, Calcutta, Mumbai and Chennai, along with the supply of Unleaded Petrol (ULP). Availability of ULP was extended to 42 major cities and now it is available across the country.

**2000-01:** In 2000, passenger cars and commercial vehicles met Euro I equivalent India 2000 norms. Euro II equivalent Bharat Stage-II (BS-II) norms were in force from 2001 in four metros—Delhi, Mumbai, Chennai and Kolkata.

**2002:** The first auto fuel policy was announced in August 2002. It laid down the emission and fuel roadmap up to 2010. As per the policy, four-wheelers in 13 metro cities moved to BS-III emission norms from April 2005 and the rest of the country to BS-II.

**2010:** BS-IV for 13 metro cities was implemented from April 2010 and the rest of the country moved to BS-III. It has now been extended to more than 50 cities.

**2014:** The second version of the fuel policy—Auto Fuel Policy 2025—was submitted to the oil and gas ministry. It lays down the emission and fuel roadmap up to 2025 and envisages BS-IV roll out across the country by 2017 in a phased manner, with BS-V emissions in 2021 and BS-VI from 2024. The proposal is yet to be accepted by the government and notified.

- இது மத்திய கனரகத் தொழிற்சாலை மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ளது.

- BS-VI விதிகளுக்கு மாறுவதன் மூலம், உலகத்தில் தற்போது நடைமுறையில் உள்ள எரிபொருள் தரத்திற்கான உயர்ந்த அளவுகளை உபயோகிக்கும் நாடாக இந்தியா மாறும்.

# மாநிலச் செய்திகள்

## 'போஷன் அபியான்' - குஜராத்தில் தொடக்கம்

- குஜராத் முதலமைச்சர் விஜய் ரூபானி போஷன் அபியான் திட்டத்தினை தொடங்கி வைத்துள்ளார். இத்திட்டம் அங்கன்வாடி மையங்கள் மூலம் ஊட்டச்சத்து மிக்க உணவுகளை வழங்கும். குழந்தைகளிடையே நிலவும் ஊட்டச் சத்தின்மையை ஒழிப்பதற்கான மாநிலம் தழுவிய ஒரு திட்டம் இது ஆகும்.
- ரூ.270 கோடியில் மதிப்பிடப்பட்ட, 14-18 வயதிற்குட்பட்ட பெண்களிடையே நிலவும் ஊட்டச் சத்தின்மையை ஒழிப்பதற்கான பூர்ணா (PURNA) திட்டத்தினையும் இவர் தொடங்கி வைத்தார்.
- பூர்ணா என்பது (PURNA - Prevention of Under Nutrition & Reduction of Nutritional Anaemia) ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் இளம் பருவ பெண்களிடையே உள்ள ஊட்டச்சத்து குறைபாட்டு இரத்த சோகையினை தடுத்தல்.
- தேசிய அளவிலான போஷன் திட்டம் மார்ச் 8, 2018 அன்று ராஜஸ்தானில் பிரதம மந்திரியால் தொடங்கி வைக்கப்பட்டது.

## ராணி ஜார்ஜ் குழு

- மாநிலத்திற்கான அதிகாரப் பூர்வமான பாடலைத் தேர்ந்தெடுப்பதற்கு சிறந்த எழுத்தாளர்கள் மற்றும் மொழி நடை நிபுணர்கள் கொண்ட குழுவினை கேரள அரசு அமைத்துள்ளது.
- கலாச்சாரத் துறை செயலாளர் ராணி ஜார்ஜ் இக்குழுவின் ஒருங்கிணைப்பளராக இருப்பார்.
- சிறந்த விமர்சகர் M.லீலாவதி, கவிஞர் ஏழச்சேரி ராமச்சந்திரன், M.M. பஷிர், M.R.ராகவா வாரியர் மற்றும் K.P.மோகனன் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.
- அகாடமியால் பெறப்பட்ட மற்றும் இறுதிபடுத்தப்பட்ட பதிவுகளிலிருந்து இந்நிபுணர் குழு பொருத்தமான பாடலைத் தேர்வு செய்யும்.

# முக்கிய தினங்கள்

## உலக விளையாட்டு பத்திரிக்கையாளர்கள் தினம் - ஜூலை 02

- உலக விளையாட்டு பத்திரிக்கையாளர்கள் தினம், விளையாட்டின் மேம்பாட்டிற்கான விளையாட்டு பத்திரிக்கையாளர்களின் சேவையை அடையாளப்படுத்திக் காட்டுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 02 அன்று கடைபிடிக்கப்படுகிறது.
- இத்தினத்தின் முக்கிய கருத்தானது, விளையாட்டு பத்திரிக்கையாளர்களை

அவர்களது வேலையில் சிறந்து விளங்கச் செய்யவும் உலகிற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குவதற்கும் ஊக்கப்படுத்துவதே ஆகும்.

## உலக விலங்குவழி நோய்கள் தினம் - ஜூலை 06

- உலக விலங்குவழி நோய்கள் தினமானது ஒவ்வொரு வருடமும் இந்நோயைப் பற்றியும், இந்நோயினை எவ்வாறு தடுப்பது மற்றும் நோய் ஏற்படும் போது எவ்வகையான செயல்களை செய்வது என்பது பற்றியும் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக ஜூலை 06 அன்று கடைபிடிக்கப்படுகிறது.
- சூனோசெஸ் என்ற வார்த்தை சூன் - விலங்கு மற்றும் நோசஸ் - நோய் ஆகிய கிரேக்க வார்த்தையிலிருந்து பெறப்பட்டது.
- கால்நடை மருத்துவர்களின் கூற்றுப்படி ஏறத்தாழ 150 அறிந்த விலங்கு வழி நோய்கள் உள்ளன.
- முக்கிய விலங்கு வழி நோய்கள் காசநோய், பூனை கீறல் காய்ச்சல், உண்ணிவாதம், உருளைப்புழுக்கள், கொக்கிப் புழுக்கள், சொறி மற்றும் வெறி பிடித்தல் ஆகியனவாகும்.

- - - - - - - - - - - - - - -